Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

08.01.2021 வெள்ளிக்கிழமை

## மூச்சுத் திணறலால் முதியவர் உயிரிழப்பு

சாவகச்சேரி, ஜன.9
கைதடி கோவிலாக்கண்டி யைச் சேர்ந்த 62 வயது முதியவர் ஒருவர் நேற்று மாலை மூச்சுத் திணறல் காரணமாக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் அனுமதிக்

2

### புதினம் தெரியுமோ?

யாழ்ப்பாணம் நல்லூர் கோயிலுக்கான வளைவு செம்மணியில் அமைக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. அந்த வளைவின் ஒளிப்படங்கள் முக நூலில் பரவலாக இப்போது பகிரப்பட்டு வருகின்றன. தைப்பொங்கலுடன் அந்த வளைவு திறக்கப்படும் என்ற அறிவிப்பு

7

## எழுமாற்றுப் பரிசோதனையில்

# வவுனியாவில் 55 பேருக்கு ஒரே நாளில் கொரோனா

### மற்றொரு உப கொத்தணி? மேலும் பலருக்கும் தொற்றிருக்கலாம்?

வவுனியா, ஜனவரி 8

வவுனியாவில் நேற்றுமுன்தினம் 204பேரிடம் மேற் கொள்ளப்பட்ட எழுமாற்றுப் பரிசோதனையில் 55 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தில் முதல்முறை ஒரே தடவையில் அதிக தொற்றாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

2

## ரியூசன்கள் 25ஆம் திகதி திறப்பு

*கல்வி அமைச்சர் அறிவிப்பு*

கொழும்பு, ஜன. 8
தனியார் கல்வி நிலையங் களின் கல்வி நடவடிக் கைகளை எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் மீள ஆரம்பிக்க முடியும் என்று கல்வி அமைச் சர் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ் அறிவித்

2

## பரு.வாசிக்கு தொற்று

### ஆசிரியர்கள், மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்!!

யாழ்ப்பாணம், ஜன. 8
மூதூரில் மேற்கொண்ட எழுமாற்றுப் பரிசோத னையில் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. இவருக்கு அன்டிஜன் சோத

2

## கோத்தாபய அரசுக்கு நாம் வேறு நாட்டவர்கள்

### நாடாளுமன்றில் முழங்கிய விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜன. 8
சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு துறைகளில் வேலை செய்ப வர்கள் தவறிழைத்தால் அவர்களுக்கான தண்டனையைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவதே வழமையான நடைமுறையாகும். ஆனால் இங்கு தமிழர்களைப் படுகொலை செய்பவர்களுக்கே பதவி உயர்வுகளும்,

7


## விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஜன. 8
கிளிநொச்சியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவர் இன்று

2

## எங்கள் இளைஞர்களை மீண்டும் ஆயுதமேந்த வைக்கப்போகின்றீர்களா?

*கோத்தா அரசிடம் சித்தார்த்தன் கேள்வி*



கொழும்பு, ஜன. 8
நாங்கள் மீண்டுமொரு ஆயுதப் போராட்டத்தை விரும்ப வில்லை. ஆனாலும் மாகாண சபைகளை இல்லாதொழித்தால் இளைஞர்கள் மத்தியில் அது கொந்தளிப்பை உருவாக்கக்கூடும். சாத்வீகம் மற்றும் ஆயுதப் போராட்டங்களால்

7

## மணிவண்ணன், ஆனோல்ட் மேயர் தெரிவில் போட்டியிட்டதில் எந்தச் சட்டச் சிக்கலுமில்லை!

*உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் தகவல்*

யாழ்ப்பாணம், ஜன. 8
மாநகரசபையின் மேயர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இ.ஆனோல்ட் மற்றும் வி. மணிவண்ணன் ஆகியோர் போட்டியிட்டமை தொடர்பில் சட்டரீதியாக எந்தச் சிக்கலுமில்லை தவ றுமில்லை. இவ்வாறு வடக்கு மாகாண உள்ளூ ராட்சி ஆணையாளர் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயராக இருந்த இ.ஆனோல்ட், வரவு செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் தோல்வி யடைந்ததைத்

2

## தயாசிறிக்கு 'கொரோனா'



### நெருக்கமாகப் பழகியவர்கள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜன. 8
இலங்கையில் கொரோனாத் தொற்றுடன் அரசியல் வாதி ஒருவர் முதன்முதலாக அடையாளம் காணப்பட் டுள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சி யின் பொதுச் செயலாளரும் பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள் நாட்டு உற்பத்தி இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகரவே கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். அவர் ஹிக்கடுவை தனியார்

2

## யாழ். பல்கலையில்

## உடற்கல்வி விஞ்ஞானமாணி பட்டப்படிப்புக்கு அங்கீகாரம்

யாழ்ப்பாணம், ஜன. 8
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தில் உடற்கல்வி விஞ்ஞானமாணி கற்கைநெறியை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கி யுள்ளது. பல்கலைக் கழகத்தின் இணை மருத்துவ விஞ்ஞான பீடத்தின் கீழ் உடற்கல்வி விஞ் ஞானமாணி கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தால் முன் வைக்கப்பட்ட கோரிக்கை பல்கலைக்கழக மானியங்

2

# வவுனியாவில் 55 பேருக்கு...

வவுனியா இந்தக் கொத்தணியில் மேலும் பலருக்கு தொற்று இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.
வவுனியா பட்டாணிச்சூரைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண் தொற்றாளராக முதலில் அடையாளம் காணப்பட்டிருந்தார். அவரின் உறவினரான கிளிநொச்சி வளாகத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவரும் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டிருந்தார். அத்துடன் அவரின் குடும்ப உறுப்பினர்கள் 5 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.
இதனையடுத்து பட்டாணிச்சூர் பகுதி முடக்கப்பட்டது. வவுனியா நகர்ப் பகுதிகளில் கடைகள் வைத்திருப்பவர்கள் பலரும், அங்கு பணிபுரிபவர்கள் பலரும் பட்டாணிச்சூரைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பெரும்பாலானோர் முடக்கத்தை மீறி வர்த்தக நிலையங்களில் பணிபுரிந்துள்ளனர். அத்துடன் வவுனியா நகர் என்பதால் பெருமளவானோர் இந்த வர்த்தக நிலையங்களுக்கும் வந்து சென்றுள்ளனர்.
இந்த நிலையில் நேற்றுமுன்தினம் பட்டாணிச்சூர் பகுதியைச் சேர்ந்தவர்களுடன் தொடர்புடைய வியாபார நிலையங்களில் பணிபுரிபவர்கள் 204பேர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களின் பரிசோதனை முடிவுகள் இன்று மதியம் வெளியாகின. அதில் 55 பேருக்கு தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தக் கொத்தணியின் தொற்றாளர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக்கூடும் என்று கூறப்படுகின்றது. இருப்பினும் இதுவரையில் வவுனியாவை முடக்குவது தொடர்பில் எந்த உத்தியோகபூர்வ அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. (ஓ,5,26,18,110)

## மூச்சுத் திணறலால்...

கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சைப் பயனின்றி இன்று உயிரிழந்தார்.
இராசையா இராஜநாகேஸ்வரன் என்பவரே இவ்வாறு சிகிச்சைப் பயனின்றி உயிரிழந்துள்ளார்.
இவரின் மரணம் தொடர்பில், விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரிப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் இன்று அறிக்கைத் தாக்கல் செய்தனர்.
அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் யாழ்ப்பாண பிரதேச திடீர் விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கைத் தாக்கல் செய்யவேண்டும் எனப் பொலிஸாரைப் பணித்துள்ளார். (ற-9)

## விபத்தில்...

உயிரிழந்துள்ளார். தருமபுரத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான உதயசேகர் கருணாகரன் (வயது 28) என்பவரே உயிரிழந்துள்ளார்.
கடந்த 5ஆம் திகதி இரவு, கிளிநொச்சியிலிருந்து தருமபுரம் நோக்கி மோட்டார் சைக்கிளில் செல்லும் போது, முரசுமோட்டைப் பகுதியில் வீதியில் நின்ற மாட்டுடன் மோதுண்டு காயமடைந்துள்ளார்.
உடனடியாக கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். (ஓ,113)

# பருத்தித்துறை ...

னையே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பருத்தித்துறை அல்வாய் பகுதியைச் சேர்ந்த இவர் கடந்த மாதம் 19ஆம் திகதியிலிருந்து கடந்த 6ஆம் திகதி வரையில் வீட்டாருடன் தங்கியிருந்துள்ளார். கண்ணிவெடி அகற்றும் பிரிவில் வேலை செய்யும் இவர் வேலைக்காக மூதூர் சென்றுள்ளார். அங்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் சோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இவரது இரு பிள்ளைகளும் பருத்தித்துறையிலுள்ள ஆரம்பப் பாடசாலையில் கல்வி பயில்கின்றனர். பாடசாலையில் கடந்த 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் நடந்த வகுப்புகளுக்கு அவர்கள் சென்று வந்துள்ளனர்.
இதனையடுத்து அந்தப் பகுதிக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட்டால், பாடசாலையின் 4 ஆசிரியர்கள், 32 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்தப் பாடசாலையின் அதிபர், புலோலியில் கண்டுபிடிக்கப்பட்ட தொற்றாளர் சென்று வந்த தொலைபேசி நிலையத்துக்குச் சென்றமையால் ஏற்கனவே தனிமைப்படுத்தலில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ,9,26,159)



# தயாசிறிக்கு...

ஹோட்டலில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். தயாசிறி ஜயசேகரவுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமை அரசியல்வாதிகள் மத்தியில் பெரும் அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தநிலையில், இவருடன் நெருக்கமாகப் பழகிய அரசியல்வாதிகளை தனிமைப்படுத்தும் நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் களமிறங்கியுள்ளனர். (ஓ,22)

## 11 கைதிகளின்...

டுத்தப்பட்டது.சிறை வளாகத்தில் அமைதியின்மை குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட ஐந்து பேர் கொண்ட நிபுணர் குழுவினராலேயே இந்தத் தகவல் இன்று நீதிமன்றுக்கு தெரிவிக்கப்பட்டது.
எட்டுக் கைதிகள் மாத்திரம் துப்பாக்கிச் சூட்டுக்குள்ளாகி உயிரிழந்தனர் என முன்னர் கூறப்பட்ட நிலையிலேயே இந்தத் தகவல் வெளிவந்துள்ளது.
இதேவேளை உயிரிழந்த கைதிகளில் கொரோனாத் தொற்றுக்குள்ளான கைதிகள் மூவரின் உடல்களை அடக்கம் செய்ய வத்தளை நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஒப்புதல் அளித்தார். (ஓ,இ)

## டில்லியின்....

திருத்தச்சட்டம் தொடர்பில் அவரால் வெளியிடப்பட்ட அறிவிப்பு ஆகியன தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே குணதாச அமரசேகர இவ்வாறு வலியுறுத்தினார்.
'1987 ஆம் ஆண்டு இந்தியாவால் பலவந்தமாக திணிக்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டமும், அதன்மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபை முறைமையும் எமது நாட்டுக்கு அவசியமில்லை. இவை இரண்டும் இல்லாதொழிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம்.
அதற்காகவே இந்த அரசுக்கு நாட்டு மக்களும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வழங்கியுள்ளனர். இந்த நிலையில் 13இற்கு உயிர்கொடுக்கவும், உச்சபட்ச அதிகாரத்தை பெற்றுக்கொடுப்பதற்கும் இந்தியா முயற்சிக்கின்றது. அந்நாட்டின் பிரதிபலிப்பையே வெளிவிவகார அமைச்சர் வெளிப்படுத்தியுள்ளார்.

# உடற்கல்வி...

கள் ஆணைக்குழுவின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டு, அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இணை மருத்துவ விஞ்ஞான பீடத்தின் கீழ் விளையாட்டு விஞ்ஞான அலகு, புதியதொரு துறையாக உள்வாங்கப்படவுள்ளது.
1998ஆம் ஆண்டு, அப்போதைய துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையால் உடற்கல்வி டிப்ளோமாக் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஆரம்ப காலங்களில் அந்தக் கற்கைநெறி மருத்துவ பீடம், வணிக முகாமைத்துவ பீடம் ஆகியவற்றின் கீழ் மாறி, மாறி செயற்படுத்தப்பட்டது. இரண்டு வருட காலத்தைக் கொண்ட டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களை, மூன்றாம் வருடத்தில் உடற் கல்வி மாணிப் பட்டதாரிகளாகப் பயிற்றுவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், அங்கு நிலவிய உள்ளக முரண்பாடுகள் காரணமாக அது சாத்தியப்படாமல் போனது.
விஞ்ஞான பீடத்தின் கீழும், கலைப் பீடத்தின் கீழும் உடற் கல்விமாணிப் பட்டப்படிப்பை ஆரம்பிப்பதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அப்போதைய பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அவை அங்கீகரிக்கப்படவில்லை.
கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் புதிய துணைவேந்தராக பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பதவியேற்ற பின்னர், பல்கலைக்கழகத்தின் இணை மருத்துவ விஞ்ஞான பீடத்தின் கீழ் உடற் கல்வி விஞ்ஞானமாணி பட்டப்படிப்பை நடாத்துவதற்காக மூதவை, பேரவை ஆகியவற்றின் அங்கீகாரத்துடன் உடற்கல்வி விஞ்ஞானமாணி பட்டப்படிப்புக்கான முன்மொழிவு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த முன்மொழிவு, நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டு, அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ஓ,20)

## ரியூசன்கள்...

துள்ளார்.
நாடாளுமன்றில் இன்று அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.
சுகாதார அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் பாடசாலைகள் எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன. தனியார் கல்வி நிலையங்களை மீள ஆரம்பிக்கவும் ஜனவரி 25ஆம் திகதி தொடக்கம் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (ஓ,இ)

## மேயர் தெரிவில் போட்டியிட்டதில்...

தொடர்ந்து பதவியிழந்தார். புதிய மேயருக்கான தெரிவு கடந்த மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணம் மாநகர சபையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்றிருந்தது.
இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மீண்டும் ஆனோல்ட் நிறுத்தப்பட்டிருந்தார். அவரை எதிர்த்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டு அந்தக் கட்சியால் நீக்கப்பட்ட வி.மணிவண்ணன் போட்டியிட்டிருந்தார். இதில் மணிவண்ணன் வெற்றி பெற்று தெரிவு செய்யப்பட்டிருந்தார்.
இந்த நிலையில், ஆனோல்ட், மணிவண்ணன் இருவரும் போட்டியிடுவதற்கு சட்டரீதியாக தகுதியற்றவர்கள் என்ற குற்றச்சாட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாநகர சபை உறுப்பினரான முத்து முகம்மது நிபாகர் சட்டத்தரணியால் முன்வைக்கப்பட்டுள்ளது.
சட்டத்தினால் பதவியை இராஜினாமாச் செய்தவர் என்று வகைப்படுத்தப்பட்ட ஆனோல்டை போட்டியிட அனுமதித்தமை தவறு என்றும், மாநகர சபைக்கு மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படாத மணிவண்ணனை மேயருக்கு போட்டியிட அனுமதித்தமை தவறு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்தக் குற்றச்சாட்டுக்கள் எந்தச் சட்டவலுவும் இல்லாதவை என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் உயர் அதிகாரி குறிப்பிடுகின்றார். மாநகரசபை உறுப்பினராக இருக்கும் எவரும் மேயருக்குப் போட்டியிட முடியும் என்பதே சட்ட ஏற்பாடு என்று அந்த அதிகாரி சுட்டிக்காட்டுகின்றார்.
இதேவேளை, சட்டத்தரணியால் அனுப்பப்பட்டுள்ளது எனக் கூறப்படும் கடிதம் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்துக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று அறியமுடிகின்றது. (ஓ,5)

# நிபுணர் குழுவின் அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவும்

### இம்ரான் மஹ்ரூப் எம்.பி தெரிவிப்பு

திருகோணமலை, ஜன.8

ஜனாஸா விவகாரம் தொடர்பான நிபுணர் குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முஸ்லிம்களின் ஜனாஸா தொடர்பாக நாளுக்கொரு தகவல்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. ஜனாஸாவை அடக்கம் செய்ய வரண்ட நிலம் ஒன்றைத் தேடுமாறு ஜனாதிபதி கூறியதாகக் கூறி, இடமும் அடையாளம் காணப்பட்டது என கடந்த மாதம் செய்தி வெளியிட்டனர்.

ஒரு மாதத்துக்கு முன் அடையாளம் காணப்பட்ட இடத்தை மீண்டும் தேடுமாறு பிரதமர் கூறினார் என சில வாரங்களுக்கு முன்னர் தெரிவிக்கப்பட்டது.



மாலைதீவில் அடக்கம் செய்ய தீவொன்று ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் செய்தி வெளியிடப்பட்டது.

ஜனாஸாக்களை எரிக்க பெட்டிகளுக்கு மக்களிடம் இருந்தே பணம் அறவிடும் அரசாங்கம் ஜனஸாக்களை மாலைதீவுக்கு கொண்டு சென்று அடக்கம் செய்யுமா?

இந்த நாட்டு அரசுக்கு வரி செலுத்தி இங்கு இவ்வளவு காலம் இலங்கையர்களாக வாழ்ந்தவர்களை வெளிநாடொன்றில் அடக்கம் செய்வது அவர்களின் இன்னொரு அடிப்படை உரிமை மீறல்.

இவ்வாறாக மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்து வந்த நிலையில் சுகாதார துறையே இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் அவர்களின் வழிகாட்டலுக்கு அமைவாகவே அரசாங்கம் தீர்மானிக்கும் என தெரிவித்து நிபுணர் குழுவொன்றை நியமித்தது.

அந்த குழுவும் தனது இறுதி அறிக்கையை சமர்ப்பித்து அதில் அடக்கம் செய்யவும் முடியும் எரிக்கவும் முடியும் என குறிப்பிட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பொழுது அரசாங்கத்தில் உள்ள சில உறுப்பினர்கள் கூறுகின்றனர் இது தொடர்பாக அரசுதான் இறுதி முடிவெடுக்கும் சுகாதார துறையல்ல என கூறுகின்றனர். ஆகவே யார் சொன்னாலும் நாங்கள் எரிக்கும் நிலைப்பாட்டில் தான் இருப்போம் என்ற அரசின் நிலைப்பாடே இந்த மாறுபட்ட கருத்துக்களில் இருந்து தெளிவாகிறது.

ஆகவே சுகாதாரத் துறை நிபுணர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதை நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும் - என்றார். (ற-இ)



## கலைஞர்கள் கௌரவிப்பு

கிளிநொச்சி, ஜன.8

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கலைஞர் தரிசிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கலைஞர்களுடனான சந்திப்பு ஒன்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது. இதன்படி, தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களது வீடுகளுக்கு மாவட்டக் கலாசார உத்தியோகத்தர், மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலைஞர்கள் ஆகியோர் சென்று அவர்களைப் பாராட்டி கௌரவித்தனர். மேலும் கலைஞர்களுக்கு 3000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் என்பனவும் வழங்கப்பட்டன. (வ-21)



## கள் ஏற்றுமதி ஆரம்ப நிகழ்வு

தென்மராட்சி, ஜன.8

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினரால் உற்பத்தி செய்யப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட கள் அவுஸ்திரேலியா நாட்டுக்கு அனுப்பப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு, கடந்த 3 ஆம் திகதி கொத்தணித் தலைவர் க.துரைசிங்கம் தலைமையில் வடிசாலையில் இடம்பெற்றது. நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிஷாந்த பத்திராஜ் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ந-9)



## மரக்கன்றுகள் கையளிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவர்களின் மரநடுகைத்திட்டத்தை வலுப்படுத்தும் முகமாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத்தலைவருமாகிய ஈஸ்வரபாதம் சரவணபவனால் ஒரு தொகுதி மரக்கன்றுகள் கையளிக்கப்பட்டன. பல்கலைக் கழகத்தின் கலைப்பீட 40 ஆம் அணி மாணவர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக இவை வழங்கப்பட்டன. (வ-ரி4)

## மத்தியஸ்தர் சபை அமர்வு சனிக்கிழமை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ் மாவட்ட விசேட காணி மத்தியஸ்தர் சபை அமர்வு எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை முதல் மீண்டும் யாழ். மத்திய கல்லூரியில் ஆரம்பமாக உள்ளது. இதற்கான உத்தரவை நீதி அமைச்சின் மத்தியஸ்தர் ஆணைக்குழு, யாழ்.மாவட்ட காணி மத்தியஸ்தர்சபையின் தவிசாளர் தேவதயாளனுக்கு அறிவித்துள்ளது. எனவே காணிப் பிணக்குடன் தொடர்புடையவர்கள் யாழ். மாவட்டத்தில் 15 பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பொதுமக்கள் பிணக்கு தொடர்பான விபரங்கள், அதற்கான கடிதங்கள். வரைபடங்கள்,5 ரூபா முத்திரை மற்றும் முழுமையான விபரங்களுடன் எதிர்வரும் 9 ஆம் திகதி தொடர்புகொள்ளுமாறு தவிசாளர் தேவதயாளன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்ட காணி மத்தியஸ்தர் சபைகள் கடந்த வாரம் முதல் விசேட மத்தியஸ்த பணியை ஆரம்பித்துள்ளன. (ந-50)

# மட்டு. போதனா மருத்துவமனைக்கு இதய வடிகுழாய் உபகரணங்கள்

### சாணக்கியன் எம். பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன.8

மட்டக்களப்பு போதனா மருத்துவமனை இருதயவியல் பிரிவின் ஆய்வகத்துக்கு வர இருந்த இதய வடிகுழாய் உபகரணங்கள் விரைவில் மருத்துவமனைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புதிய இருதயவியல் பிரிவின் ஆய்வகத்துக்கு இரு கிழமைகளில் வர இருந்த இதய வடிகுழாய் மற்றும் ஆஞ்சியோகிராம் வைத்திய இயந்திர உபகரணங்களை, களுத்துறை மாவட்டத்துக்கு மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனின் தலையீட்டைத் தொடர்ந்து, குறித்த உபகரணங்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சமர்ப்பிக்க வேண்டிய செயற்பாடுகளை உடன் நடைமுறைப்படுத்த வேண்டுமென பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

மக்களின் இப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும். எமது கட்சி மற்றும் எனது செயல்பாடுகள் அனைத்தும் எமது மக்கள் சார்ந்ததாகவே இருக்கும் என்றார். (ந-150)

# அரசியல் கைதிகளை விடுவிக்க விரைந்து ஆவன செய்யுங்கள்!!

## சர்வமதத் தலைவர்களிடம் உறவுகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.8

கொரோனாத் தொற்றால் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள அரசியல் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் இத்தருணத்திலாவது விடுதலை செய்ய வேண்டும் என அரசியல் கைதிகளின் உறவினர்கள் சர்வமதத் தலைவர்கள் முன்னிலையில் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.


ஒன்றுபட்டு எமது உறவுகளை சிறை மீட்போம் எனும் தொனிப்பொருளில் குரலற்றவர்களின் குரல் அமைப்பினரால், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய சர்வமத கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணம் தியாகி அறக்கொடை மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

இதன்போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். இக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சர்வமத பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கைதிகளின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் சிறையிலுள்ள எமது உறவுகளை விடுவிக்க மதத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். அரசியல்கைதிகளை விடுதலை செய்யக் கோரிய ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் மதத் தலைவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (வ-20)

## 193 உக்ரைன் பயணிகள் நாட்டை வந்தடைவு!

கொழும்பு, ஜன.8

உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் 193 பேரை ஏற்றி வந்த ஐந்தாவது விமானம் இன்று நண்பகல் 12 மணியளவில் மத்தளை விமான நிலையத்தை வந்தடைந்தது. நாட்டை வந்தடைந்த சுற்றுலாப் பயணிகள் பி.சி.ஆர் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டுள்ளனர். (ற-இ)



## ஹிஸ்புல்லாவுக்கு கொரோனா தொற்று

கொழும்பு, ஜன. 9

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்காக கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட சட்டத்தரணி ஹிஸ்புல்லாவுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

சட்டத்தரணி ஹிஸ்புல்லா நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படாத நிலையில், அவர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார் என சி.ஐ.டியினர் நீதிமன்றில் தெரிவித்தனர். (ரி5)

## இடைத் தரகர்களின் தலையீட்டை நீக்குமாறு உற்பத்தியாளர் கோரிக்கை

சாவகச்சேரி, ஜன.8

சாவகச்சேரி பேருந்து நிலையத்திலுள்ள இடைத் தரகர்களின் தலையீட்டை நீக்குமாறு சந்தைக்கு பொருள்கள் கொண்டு வரும் உற்பத்தியாளர்கள் சாவகச்சேரி நகரசபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சந்தை மூடப்பட்டு வேறு இடங்களில் செயல்படுவதால் பேருந்து நிலையத்திலுள்ள தரகர்கள் பொருள்கள் கொண்டு வருவோரை ஏமாற்றி குறைந்த விலையில் பொருள்களை கொள்வனவு செய்கின்றனர். இவ்வாறான தரகர்களின் தலையீட்டை நீக்கினால் சந்தை விற்பனை அலகுகள் காணப்படும் இடத்துக்குச் சென்று நியாயமான விலைக்கு பொருள்களைக் வழங்க முடியும் என உற்பத்தியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் உற்பத்தியாளர்கள் ஒருவர் தெரிவித்துள்ளதாவது, நேற்றைய தினம் வலிகாமத்திலிருந்து சந்தைக்கு வெங்காயம் கொண்டு வந்த வேளையில் எம்மிடமிருந்து ஒரு கிலோ 200 ரூபா வீதம் இடைத்தரகரும் அவருடன் நின்றவர்களும் வெங்காயத்தை வாங்கினர். ஆனால் சந்தைக்குச் சென்று விசாரித்த போது கிலோ 400 ரூபாவாக விற்பனை செய்யப்படுவதை அறிந்தோம். எம்மைப்போல் பலர் தரகர்களிடம் ஏமாறுவதால் பேருந்து நிலையத்தில் உள்ள தரகர்களின் தலையீட்டை நீக்கினால் எம்மைப் போன்ற உற்பத்தியாளர்களால் நியாயமான விலையில் பொருள்களை வழிவகை வழங்க முடியும் எனத் தெரிவித்தனர். (வ-9)

## இலங்கைக்கு 18,000 போதை வில்லைகள்!

### பூனைகளுக்கான உணவு என இறக்குமதி

கொழும்பு, ஜன.8

பூனைகளுக்கான உணவு என்ற அடிப்படையில் பெல்ஜியத்திலிருந்து சில பொதிகள் இலங்கைக்கு எடுத்து வரப்பட்ட நிலையில் அவை பூனைகளுக்கான உணவில்லை. போதைப்பொருள் வில்லைகள் என்பதை எமது சுங்க அதிகாரிகள் மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் வைத்து துல்லியமாக கண்டுபிடித்துள்ளனர்.

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்துக்கு வந்து சேர்ந்த ஒரு சில தபால் பொதிகளில் ஏற்பட்ட சந்தேகம் காரணமாக, இலங்கை சுங்கத்தரப்பினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதனால் 18 ஆயிரம் போதைப் பொருள் வில்லைகள் அந்தப் பொதிகளில் இருப்பதை அதிகாரிகள் இனங்கண்டு கொண்டனர். 9 கிலோ கிராம் எடை கொண்ட இந்த 18 ஆயிரம் போதைப்பொருள் வில்லைகளின் பெறுமதி சுமார் 13 கோடி ரூபா என சுங்கத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். பூனைகளின் உணவு என்ற போர்வையில் பொதிகளில் அடைக்கப்பட்ட நிலையில், பெல்ஜியத்திலிருந்து இந்தப் போதைப்பொருள் வில்லைகள் எடுத்து வரப்பட்டுள்ளன எனத் தெரியவருகின்றது.(ற-இ)



## நீரேந்துப் பரப்பு ஆக்கிரமிப்பு: அளவீட்டுக்குப் பரிந்துரைப்பு

முல்லைத்தீவு, ஜன.8

குளங்களின் நீரேந்துப் பரப்பை ஆக்கிரமித்து கட்டடங்கள் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்வது தொடர்பில் துணுக்காய் பிரதேச செயலாளரால் நில அளவைத் திணைக்களத்துக்கு அளவீட்டுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் துணுக்காய் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் த.பிரியதர்சினி தெரிவித்துள்ளதாவது, துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள குளங்களில் குஞ்சுக்குளம், துணுக்காய்குளம், முருங்கன் குளம், அனிஞ்சியன்குளம், நமனங்குளம் ஆகிய ஐந்து குளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு கட்டடங்கள் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை குளங்களின் நீரேந்துப்

பகுதியில் நடைபெறுகின்றன. இதனைத் தடுப்பதற்கு பிரதேச செயலாளர் நில அளவைத் திணைக்களத்துக்கு குளங்களின் நீரேந்துப் பகுதிகளை அளவீடு செய்யுமாறு பரிந்துரைத்துள்ளார். குளங்களின் நீரேந்துப் பகுதிகளில்

சட்டவிரோதமான முறையில் ஆக்கிரமிப்பு மேற்கொண்டுள்ளவர்கள் அடையாளப்படுத்தப்பட்டால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (வ-ரி2)

# சுற்றாடலைப் பாதிக்கும் தனியார் நிறுவனத் திட்டம்

### குரல் எழுப்பக் கோருகிறார் பேராயர் மல்கம் கர்தினால்

கொழும்பு, ஜன.8

தனியார் நிறுவனமொன்று சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் மேற்கொள்ளும் திட்டத்துக்கு எதிராக கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை குரல் கொடுத்துள்ளார்.

முத்துராஜவெல சுற்றாடல் கட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் இந்த நிறுவனம் செயற்படுவதற்கு எதிராக குரல் எழுப்புமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

முத்துராஜவெல பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார். தனியார் நிறுவனமொன்று முத்துராஜவெல பகுதியில் 700 ஏக்கர் நிலப் பரப்பில் தன்னிச்சையாக புதிய திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது எனவும் இந்தத் திட்டத்தால் இந்தச் சுற்றாடல் கட்டமைப்புக்கு பெரிய பாதிப்புக்கள் ஏற்படும் சாத்தியம் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ற-இ)

# உவர்ப் பரம்பலைத் தடுக்க நடவடிக்கை எடுக்குக!

## விவசாயிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.8

முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளம் கிராமத்தில் ஏற்பட்டுள்ள உவர்ப் பரம்பலைத் தடுப்பதற்கு துணுக்காய் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கிராம விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் காணப்படுகின்ற அம்பலவன் சின்னக்கட்டு குளத்தின் கீழான பெருமளவு நிலம் உவர் நிலமாக மாறிவருவதால் அங்குள்ள மரங்கள் அழிவடைந்து வருகின்றன.

இந்த உவர்ப் பரம்பலைத் தற்போது தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், அம்பலவன் சின்னக்கட்டு குளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய இரு குளங்களின் கீழான வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறக் கூடிய அபாயம் காணப்படுகின்றது. உவர்ப் பரம்பல் பரவாமல் இருப்பதற்கான தடுப்பணைகள் அமைக்கப்பட வேண்டும்.



உவர்ப் பரம்பல் ஏற்பட்டுள்ள நிலப் பரப்பில் உற்பத்தியாகக் கூடிய பெருமளவு மரக் கன்றுகளை நடுகை செய்ய வேண்டும். இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலகம் கிராம மக்களுடன் கலந்துரையாடி விழிப்புணர்வை ஏற்படுத்தி உவர்ப் பரம்பலைத் தடுக்க வேண்டும் என்பதும் இப்பகுதி விவசாயிகளின் கோரிக்கையாகும்.(ற-ரி2)

# மயான சுற்றுமதிலின் ஒருபகுதிநிறைவு

கொடிகாமம், ஜன.8

சாவகச்சேரி பிரதேசசபையின் நிதி ஒதுக்கீட்டில் வரணி நாவற்காடு, குடமியன் இந்து மயானத்துக்கான சுற்று மதிலின் ஒரு பகுதி நிறைவுசெய்யப்பட்டுள்ளது.

வரணி வட்டார சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் சி. பிரபாகரனின் வேண்டுகோளுக்கு இணங்க கடந்த 2019 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் முதற்கட்டமாக இதற்காக ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.

கடந்த வருடத்தில் இந்த மதில் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிலையில், வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக தடைப்பட்டது. தற்போது அந்த வேலைத்திட்டம் முழுமையாக முடிவுற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற-159)



# மஹியாவ பிரதேசத்தை விடுவிக்கக் கோரிக்கை

கண்டி, ஜன.8

ஒரு மாதகாலமாக முடக்கப்பட்டுள்ள கண்டி, மஹியாவ பகுதியை தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் பவித்ராதேவி வன்னியாராச்சியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் எழுத்து மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கொரோனாப் பரவலையடுத்து கண்டி மாநகர எல்லைக்குட்பட்ட மஹியாவ பகுதி கடந்த டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதியிலிருந்து முடக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் வாழும் சுமார் 3 ஆயிரம் பேர்வரை பாதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலான குடும்பங்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இனியும் தாமதிக்காமல் அன்டிஜன் பரிசோதனைகளை துரிதப்படுத்தி, தனிமைப்படுத்தலில் இருந்து மஹியாவ பகுதியை விடுவிப்ப தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் கோரியுள்ளார். (வஇ)

# வெற்றிபெற்ற பணப் பரிசை வளர்ச்சிக்கு பயன்படுத்துக

## கோடீஸ்வர வெற்றியாளர்களுக்கு பிரதமர் அறிவுரை



கொழும்பு, ஜன.8

சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற பணப் பரிசை முறையாக வளர்ச்சிக்காக பயன்படுத்துங்கள் என பிரதமர் மகிந்த ராஜபக்ச அறிவுரை வழங்கியுள்ளார். அபிவிருத்தி லொத்தர் சபையின் கோடிபதி கப்றுக மற்றும் ஜயோதா சீட்டிழுப்புகளின் மூலம் உருவான சுபிரி கோடிபதி வெற்றியாளர்கள் இருவருக்கான காசோலைகளை கையளிக்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றிய போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பெரும் தொகை கிடைத்தவுடன் அதை அநாவசிய தேவைகளுக்கு பயன்படுத்துவதன் மூலம் இறுதியில் ஒன்றும் இல்லாத நிலைக்கு மீண்டும் தள்ளப்படலாம். இது போன்ற சம்பவங்கள் பல நேர்ந்துள்ளன. அதனால் இப்பணத்தை பிள்ளைகளதும், குடும்பத்தினதும் இறுதியாக நாட்டினதும் நலன் கருதி ஈடுபடுத்துமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நிகழ்வில், 652ஆவது கோடிபதி கப்றுக சீட்டிழுப்பில் வெற்றியீட்டிய அம்பன்பொல குமார என்பவருக்கு 8 கோடியே 79லட்சத்து 91ஆயிரத்து 625 ரூபாவுக்கான காசோலையும், 1717ஆவது ஜயோதா சீட்டிழுப்பில் வெற்றியீட்டிய கல்கமுவ ஏ.ஜி.பி.ஜி. கொடிதுவக்கு 5கோடியே 71லட்சத்து 38ஆயிரத்து 276 ரூபாவுக்கான காசோலையும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)



# சஜித்துக்கு அழைப்பு விடுத்தார் ஜெய்சங்கர்

கொழும்பு, ஜன.8

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் எதிர்கட்சித் தலைவரை நேற்றுச் சந்தித்த போது அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதன்போது இவர்கள் இருவரும் இருதரப்பு உறவுகள் குறித்தும், இருநாடுகளிடையேயான நீண்டகால வரலாற்று தொடர்புகள் குறித்தும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டனர்.(ற-இ)

# தனிமையிலுள்ளோருக்கு நிவாரணப் பொருள்கள்

கல்முனை, ஜன.8

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட கல்முனைக்குடி செய்லான் வீதி தொடக்கம் கல்முனை நகர் வாடி வீட்டு வீதி வரைக்கும் உள்ள 11 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 3 ஆயிரத்து 411 குடும்பங்களுக்கு கல்முனை பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீர் தலைமையில் உலர் உணவுப் பொதிகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று மாலை முன்னெடுக் கப்பட்டன. பிரதேச செயலகத்தால் இரண்டு வாரங்களுக்குத் தேவையான பத்தாயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் கிராம சேவையாளர்கள் ஊடாக தனிமைப் படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (ற-இ)

# பொங்கலுக்கு முன்னர் விடுவியுங்கள்

### கரைச்சி பிரதேச சபை தவிசாளர் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.8

பௌத்த மதத்தை நேசிக்கும் ஜனாதிபதி சிறையில்வாடும் அரசியல்கைதிகளை விடு தலை செய்து அவர்களை குடும்பத்துடன் இணைக்க வேண்டும் என கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் கோரிக்கை விடுத்துள்ளார். அரசியல் கைதிகளின் விடுத லையை வலியுறுத்தி மன்னார் சமூக பொருளாதார மேம் பாட்டு நிறுவனத்தின் ஏற் பாட்டில் கிளிநொச்சியில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத்தெரிவிக் கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தமது உறவுகள் சிறையில் வாழ்கின்றபோது அவர்களின் குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் அதிகமாகவே காணப்படு கின்றன.




இவ்வாறான நிலையில் பௌத்த மதம் எதைப் போதிக்கின்றதோ அதனை ஜனாதிபதியும் செய்ய வேண் டும். தைப்பொங்கலுக்கு முன்னராக அதனைச் செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். இதன் போது அரசியல் கைதியொருவரின் தாய் கருத்துத் தெரிவித்த போது, நீண்ட காலமாக அரசியல் கைதிகளாக எமது பிள்ளைகள் சிறையில் வாழ் கின்றனர். இந்த நிலையில் கொரோனா தொற்றும் அபாயமான நோயாக உரு வெடுத்துள்ளது. நாளாந்தம் இறப்பது தொடர்பான செய்திகளே எமக்கு கிடைக் கின்றன. இந்த நோயைக் கருத்தில் கொண்டேனும் எமது பிள்ளைகளை விடு தலை செய்வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றார். (வ6,214)

# சுதந்திரக் கட்சியின் தலைவர் நானே!!!

### சந்திரிகா அதிரடி அறிவிப்பு



கொழும்பு, ஜன. 8

நானே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர். மைத்திரிபால சிறிசேன என்பவர் சட்டவிரோதமா கவே அந்தப் பதவியை வகிக்கின்றார் என்று முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறுவுநத் தலைவ ரான முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 122 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, காலி முகத்திடலில் உள்ள அவரின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்திய பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே சந்திரிகா அம்மையார் மேற்கண்டவாறு கூறி னார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு தற்போது அரசியல் பயணம் என்று ஒன்று கிடையாது. கட்சி சரியான வழியில் பயணிக்கின்றதா அல்லது திசைமாறி பயணிக்கின்றதா எனக் கூறமுடியாது.

சுதந்திரக் கட்சிக்கு பொதுஜன பெரமுனவால் அநீதி இழைக்கப்படுகின்றது என்று இன்றுதான் சிலர் கூறுகின்றனர். ஆனால் முன்கூட்டியே இது குறித்து நான் எச்சரிக்கை விடுத்திருந்தேன்.

தற்போது கட்சிக்கு தலைவர் என ஒருவர் இருக்கி றார். அவர் சட்டவிரோதமாகவே அப்பதவியை வகிக்கின்றார். சுதந்திரக்கட்சியில் இருந்து நான் விலகவில்லை. ஆயுள்கால உறுப்பினர். நான்தான் கட்சிகள் தலைவர். எனினும், எந்தவொரு கூட்டத் துக்கும் எனக்கு அழைப்பு விடுக்கவேண்டாம் என சிறிசேன அறிவுறுத்தியுள்ளார்.

நான் ஐக்கிய தேசியக்கட்சி பக்கம் செல்லவில்லை. சிறிசேனதான் 5 தடவைகள் ஐக்கிய தேசியக்கட்சி யின் தலைமையகம் சென்றார். ரணிலை சேர் என்று விளிப்பதற்கு வாய்ப்பு வேண்டும் என கேட்டார். சுதந்திரக்கட்சியை மொட்டு கட்சியிடம் விற்பனை செய்தவர்தான் சிறிசேன, என்றார். (ஒ,44)

### டெங்கு பரவும் சூழல்

# 10 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல்!!

வவுனியா, ஜன.8

டெங்கு பரவும் நிலையில் வீட்டுச் சூழலை வைத்திருந்த 10 பேருக்கு எதிராக சுகாதாரப் பரிசோதகர்களால் நேற்று வவுனியா நீதிமன் றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வவுனியாவின் பண்டாரிக்குளம், வைரவப் புளியங்குளம், குருமன்காடு உள்ளிட்ட நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் தொடர்ந் தும் இந்த டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுடன் இணைந்து, பொலிஸாரும், சிவில் பாதுகாப்பு குழுவினரும் இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக் கையில் ஈடுபட்டனர்.

இதன்போது வீடு வீடாகச் சென்று டெங்கு பரவும் இடங்களைச் சோதனையிட்டதுடன் டெங்கு பரவும் அபாயத்துடன் காணப்பட்ட வீடுகளுக்கு நீதிமன்றத்தில் வழக்குப் பதிவும் செய்தனர்.

இதன்போது பலருக்கு எச்சரிக்கை கடிதமும் வழங்கப்பட்டது.

அதன்படி, 10 பேருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில், 5 பேருக்கு 25 ஆயிரம் ரூபா வீதம் நீதிமன்றால் அபராதம் விதிக்கப்பட்டதுடன், 5 பேருக்கு எதிரான வழக்கும் தவணையிடப்பட்டது. மழையுடனான தற்போதைய காலப்பகுதியில் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் காணப்படு வதால் வடிகான்கள், வீட்டின் கூரைகளில் நீர் தேங்குவது, குளிர்சாதனப் பெட்டியின் பின்பகுதி என்பவற்றில் நீர் தேங்குவதால் அவற்றைத் தினசரி பார்வையிட்டு சுத்தம் செய்யுமாறும் பொதுச் சுகாதாரப் பரிசோத கரால் பொதுமக்களுக்கு அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது. (ற-18)

# மரநடுகைத் திட்டத்தில் பலரும் கைகோர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.8

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில் நுட்ப பீட மாணவர் ஒன்றியத்தால் கிளிநொச்சி வளாகத்தில் ஒழுங்குபடுத்தப் படுகின்ற மரநடுகைத் திட்டத்துக்கு பல் வேறு தரப்பினரும் கைகொடுத்துள்ளனர்.

இதன்படி, சூழகம் அமைப்பின் செயலாள ரும், வேலணை பிரதேச சபை உறுப்பினரு மாகிய கருணாகரன் நாவலன், பசுமை இயக்க நிறுவுநர் பொ.ஐங்கரநேசன் ஆகியோரால் தலா 75 மரக்கன்றுகளும், விஞ்ஞான பீட மாணவர்களால் 40 மரக்கன்றுகளும், சட்ட மாணவர் சங்கத் தால் 25 மரக்கன்றுகளும் வழங்கப்பட்டுள் ளன என திட்டத்தின் ஏற்பாட்டுக் குழு வினர் தெரிவித்துள்ளனர். (வ-இ)

# அரிசி உற்பத்தியாளர்களுக்கு கடன் வழங்க ஆலோசனை!

கொழும்பு, ஜன.8

சிறு மற்றும் நடுத்தர அளவி லான அரிசி உற்பத்தியாளர் களுக்கு கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச நேற்று ஆலோசனை வழங்கினார்.

அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர் கள் சங்கத்தின் பிரதிநிதிகளு டன் நாடாளுமன்ற குழு அறை இரண்டில் இடம்பெற்ற கலந்து ரையாடலின் போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

பெரியளவிலான அரிசி உற்பத் தியாளர்களின் பிரச்சினைகளுக்கு முன்னர், சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் அதிகாரிகளுக்கு இதன்போது அறிவுறுத்தினார்.

நாட்டில் காணப்படும் உத்தர வாத நெல் விலைக்கு ஏற்ப எதிர் வரும் மாதம் 1 ஆம் திகதி முதல் 6 மாதங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படும் அரிசிக்கான நிலையான விலையைப் பெற் றுக் கொடுப்பது உள்ளிட்ட கோரிக்கைகளை அடிப்படை யாகக் கொண்டு இந்தக் கலந்துரையாடல் இடம்பெற் றது.

இதன்போது சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமை யாளர்களுக்கு நிவாரணமாக கடன்களைச் செலுத்துவதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (ற-இ)

# கோத்தபாய அரசுக்கு...

பதக்கங்களும், மன்னிப்புக்களும் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர். இத்தகைய காரணங்களினால்த் தான் கடந்த காலங்களில் எமது இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஒரே நாடு, ஒரே சட்டம் என அரசின் எல்லா உறுப்பினர்களும் கூறிவருகின்றனர். ஆனால், நடைமுறையில் எமக்கென வேறு சட்டம் நீதிக்கு முரணான வகையில் பின்பற்றப்படுகின்றது. இதுதான் யதார்த்தம். உங்களைப் பொறுத்தவரையில் நாம் வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆகவே, எமக்கான நீதியை நாம் தான் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக பெற்றுக் கொள்ளவேண்டும். எமது இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் நியாயமானது என்பதை இன்று சர்வதேச ரீதியாக அரசின் செயற்பாடுகளே நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளன. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த அரசு எல்லா இலங்கை மக்களுக்கு மான அரசு அல்ல என்பதை சொல்லிலும் செயலிலும் நிரூபித்து வருகின்றது. தங்களுக்கு வாக்களித்த பௌத்த சிங்கள மக்களின் விருப்பங்களுக்கு அமைவாகவே செயற்படமுடியும் என்று ஜனாதிபதி மற்றும் அரச உறுப்பினர்கள் வெளிப்படையாகவே கூறிவருகின்றனர். நாம் இலங்கையர்களாக முன்னோக்கி செல்லப் போகின்றோமா அல்லது தொடர்ந்தும் குறுகிய அரசியல் இலாபங்களுக்காக இனங்களாகப் பிரிந்து பின்னோக்கிச் செல்லப் போகின்றோமா என்பதை ஆட்சியாளர்களே தீர்மானிக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களும் இந்த நாட்டில் உரிய அதிகாரப் பகிர்வைப் பெற்று சமத்துவத்துடன் வாழ வேண்டும் என்று துணிச்சலுடன் குரல் கொடுக்கும் சிங்கள சகோதர சகோதரிமார், சிங்கள புத்திஜீவிகள், பௌத்த மதகுருமார் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எனது நன்றிகளை நான் இங்கு கூறி வைக்கின்றேன்.
தமிழ் அரசியல் கைதிகள் மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதற்கு பல காரணங்கள் உண்டு ஏற்கனவே நாட்டின் அரசை மாற்றப் போர் புரிந்த ஜே.வி.பியினர் அனைவருக்கும் மன்னிப்பு வழங்கியாகி விட்டது. எமது இளைஞர்கள் தமது உரிமைகளுக்காகவே போரிட்டவர்கள். அரசை மாற்ற அல்ல. ஆகவே அவர்களை விடுவிக்க வேண்டும். போரில் தலைமைத்துவம் வகித்த, ஆணைகள் இட்ட தமிழ் இயக்க முக்கியஸ்தர்கள் பலர் அரசால் மிக்க நெருக்கத்துடன் அணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆனால் சாதாரண இயக்க அங்கத்தவர்கள் மிகக் கொடூரமாக நடத்தப்பட்டு பல காலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஏன் என்ற கேள்விக்குப் பதில் இல்லை.
கொரோனாவால் அவஸ்தைப்படும் தமிழ் சிறைக் கைதிகளைத் தொடர்ந்து தென்னாட்டுச் சிறைகளில் வைத்திருப்பது அவர்களுக்கு பல பிரச்சினைகளைத் தந்து வருகின்றது. அவர்களை விசேடமாக வட கிழக்கு மாகாணங்களில் வைத்துத் தனிமைப்படுத்தினால் தாங்கள் பாதுகாப்பான இடங்களில் இருப்பதாகவாவது அவர்கள் உணர்வார்கள். பல தடவைகள் தமிழ்ச் சிறைக் கைதிகளை எங்கள் தென்னகச்சிறைகளில் கொடூரமாகத் தாக்கப்பட்டு கொல்லப்பட்டமை உங்கள் எல்லோருக்கும் நினைவிருக்கும்.
போர் முடிவுக்கு வர முன்னர் கைது செய்யப்பட்டு சிறைப்பட்டவர்களை போர் முடிந்து பத்து வருடங்களுக்கு மேல் ஆன படியால் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதில் என்ன பிழை இருக்கின்றது? இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட வர்கள். பயங்கரவாதத் தடைச்சட்டம் பொதுவான எமது சட்டக் கொள்கைகளுக்கு முரணான சட்டம். குற்றஏற்பு வாக்குமூலத்தின் அடிப்படையில் சான்றுகள், சாட்சிகள் ஏதுமின்றியே தண்டனை வழங்கப்பட்டவர்கள் அவர்கள். உச்ச நீதிமன்றத்தில் நான் அளித்த நாகமணி வழக்கின் சாராம்சத்தை விளங்கிக் கொண்டு குற்ற ஏற்பு வாக்கு மூலத்துக்கு மேலதிகமாக சொல்லப்பட்ட குற்றம் உண்மையில் நடந்தது என்பதை ருசுப்படுத்த சாட்சியங்கள் பெறப்பட்டிருந்தால் பல வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பன. குற்றம் உண்மையில் புரியபட்டதா என்று அறியாமல் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை மட்டும் வைத்து தண்டனை வழங்குவது எவ்வாறு நியாயமாகும் என்பதை எமது ஜனாதிபதியும் அரச மேல் மட்டமும் பரிசீலித்துப் பார்க்க வேண்டும்.
பௌத்த நாடு என்று தம்பட்டம் அளிக்கும் இந் நாடு பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற சட்டக் கொள்கைகளுக்கு எதிரான சட்டத்தின் அடிப்படையில் அரசியல் காரணங்களுக்காக சிறைக்கைதிகளை தொடர்ந்து சிறையில் அடைத்து வைத்திருப்பதை சரியா பிழையா, நீதியா அநீதியா என்று பரிசீலித்துப் பார்க்க வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டம் அல்லாது நாட்டின் வழமையான சட்டத்தின் கீழ் தமிழ்ச் சிறைக் கைதிகளுக்கு எதிரான வழக்குகள் பதியப்பட்டிருந்தால் அத்தனை பேரும் தகுந்த சாட்சியங்கள் இல்லாததால் எப்போதோ விடுதலை செய்யப்பட்டிருப்பர். ஆகவே தமிழ் அரசியற் கைதிகளை உடனே மன்னித்து விடுதலை செய்ய வேண்டும், என்றார். (ஒ,7,44)

# எங்கள் இளைஞர்களை....

கொண்டு வரப்பட்ட 13ஐயும் இல்லாது செய்துவிட்டால் பின்னர் என்ன செய்யப்போகின்றீர்கள்? அதேவேளை, புதிய அரசமைப்பு வரும் என்று நான் தனிப்பட்ட ரீதியில் நம்பவில்லை. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆரம்பத்தில் தமிழ் மக்கள் அறவழியிலேயே போராட்டங்களை முன்னெடுத்தனர். 1956ஆம் ஆண்டு பண்டாரநாயக்கவால் தனி சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்டபோது தந்தை செல்வா தலைமையில் சாத்வீக போராட்டங்கள் இடம்பெற்றன. அதன் விளையாக தந்தை செல்வாவுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட பண்டாரநாயக்க முன்வந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஜே.ஆர். ஜயவர்தன கண்டி யாத்திரையை ஆரம்பித்தார். தேரர்களும் எதிர்ப்பை வெளியிட்டனர். இதற்கு அஞ்சி பண்டாரநாயக்க மேற்படி ஒப்பந்தத்தை கிழித்தெறிந்துவிட்டார். அன்று அவர் அவ்வாறு செய்திருக்காவிட்டால், நாட்டில் மிகப்பெரிய போர் ஏற்பட்டிருக்காது.
இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் 13 ஆவது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டு மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டது. தற்போது 13 க்கு எதிராகவும் தெற்கில் கோசம் எழுப்படுகின்றது. மாகாணசபை முறைமை வெள்ளை யானை எனவும், அதனை கட்டிக் காப்பது வீண் செலவு எனவும் விமர்சிக்கப்படுகின்றது. இந்நாட்டில் மாறி, மாறி ஆட்சிக்குவந்த அரசுகளே மாகாண சபைகளை வெள்ளை யானைகளாக்கின.
மாகாண சபைகளுக்கு பகிரப்பட்ட அதிகாரங்களில் மத்திய அரசு தலையிடுவது, கல்வி, சுகாதார அமைச்சர்கள் மாகாணத்தில் இருக்கையில், மத்தியில் அவ்வாறான அமைச்சுகளை உருவாக்குதல், மாகாணசபைகளுக்கென தனி அமைச்சை வைத்திருந்தல் போன்றவற்றாலேயே மாகாண சபைகளில் நிர்வாக நெருக்கடி ஏற்படுகின்றது. செலவுகளும் அதிகரிக்கின்றது. எனவே, அதிகாரப்பரவலாக்கலை சரியான முறையில் நடைமுறைப்படுத்தினால் மாகாண சபைகள் சிறப்பாக இயங்கும்.
அதேவேளை, புதிய அரசமைப்பு வரும் என்று நான் தனிப்பட்ட ரீதியில் நம்பவில்லை. அது வேறுபிரச்சினை. இருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக நியாயமான யோசனையை முன்வைத்துள்ளோம். அவ்வாறு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவேண்டியது மக்கள் பிரதிநிதிகளின் கடமை. அதனை நாம் செய்துள்ளோம். 1972, 1978 களில் அரசமைப்புகள் கொண்டுவரப்பட்டபோது தமிழ் மக்களின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனினும், புதிய அரசமைப்பு என்பது சிறுபான்மையின மக்களை புறக்கணிக்ககூடாது. நியாயமான தீர்வு காணப்படவேண்டும், என்றார். (ஒ,44)

# கொரியத் தூதுவருடன் அமைச்சர் தினேஷ் பேச்சு

கொழும்பு, ஜன.8
கொரோனாத் தொற்றுப் பரவலையடுத்து இடைநிறுத்தப்பட்டுள்ள வேலைவாய்ப்புக்களை மீள ஆரம்பிக்கும் நோக்கில் இலங்கையில் உள்ள கொரியத் தூதுவர் வூன்ஜின் ஜியோங்குடன் வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தன கலந்துரையாடியுள்ளார்.
சந்திப்பின்போது, தொற்று நிலைமையால் தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள தொழில்களுக்காக இலங்கையில் இருந்து புதிய பணியாளர்களைப் பெற்றுக்கொள்வதை மீண்டும் ஆரம்பிப்பதற்கான கொரிய அரசாங்கத்தின் உதவியை வெளிநாட்டு அமைச்சர் கோரியுள்ளார்.
இலங்கையிலிருந்து கொரியாவுக்கான வேலைவாய்ப்பை விரைவாக மீண்டும் தொடங்கும் நோக்கத்துடன் கொரிய அதிகாரிகளுடன் இணைந்து, சுகாதார மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்ய இலங்கை அரசாங்கம் தயாராக உள்ளது என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (வ-இ)



## புதினம் தெரியுமோ?

இரண்டு தினங்களுக்கு முன்னர் வெளியாகியிருந்தது. இப்போது அதைத் தடுக்கும் பிற்போக்கு தனமான காரியங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அந்த வளைவை திறந்து வைப்பதற்கு தங்களை அழைக்க வேண்டும். இல்லையேல் திறப்பு விழாவை நடத்தவிட மாட்டோம் என்று கங்கணம் கட்டி நிற்கின்றது யாழ்ப்பாணத்தின் 'குடும்ப அரசியல்' கூட்டம். அந்த வளைவுக்குக்குரிய கோரிக்கையை முன்வைத்தது நல்லூர் தண்ணீர் பந்தல் சபை. நிதியை ஒதுக்கியவர் முன்னைய இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா. செயற்படுத்தியது நல்லூர் பிரதேச செயலகம். கட்டுமான மேற்பார்வை யாழ்ப்பாண மாவட்டச் செயலக பொறியியல் பிரிவு. இந்த வளைவு பொங்கலன்று திறந்து வைக்கப்படும் செய்தி அறிந்ததும், மண்ணெண்ணை பட்ட சாரைப் பாம்பைப் போல 'குடும்ப அரசியல்' கூட்டம் நெளியத் தொடங்கியது. தாங்கள் இல்லாமல் ஒரு திறப்பு விழாவா என்பதுதான் அவர்களின் பிரச்சினை. குடும்ப அரசியல்' கூட்டம் கச்சேரி அறையிலிருந்து கொண்டு, பொறியியல் பிரிவுக்கு, வளைவுக்கான ஒப்புதல் அளிக்கக் கூடாது என்று அழுத்தம் கொடுப்பதாகத் தகவல். அத்துடன் நல்லூர் கோயில் சபையிடமிருந்து கடிதம் வராமல், தண்ணீர் பந்தல் சபையிடம் வளைவை ஒப்படைக்கக் கூடாது என்று பிரதேச செயலகத்துக்கு நெருக்குதல். திணறி நிற்கின்றன சம்பந்தப்பட்ட தரப்புக்கள். இந்த நெருக்குதல்களிலிருந்து தமக்கு எப்போது விமோசனம் என்று அவை ஏங்கி நிற்கின்றன?

பட்சி